பதினைப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது

# இந்துசாதனம்.

ஸ்தாபிதம் (1889)

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, ரூ. | 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, ரூ. | 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூடு. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி வருஷம் சித்திரைமீ உசூஉ (1924 மே 8) வியாழக்கிழமை. { இலக்கம்—அ௯.

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

## விளம்பரம்.

### அஷ்டபந்தன மருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட சுவாமிக்குச் சாத்தும் அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்
வண்ணார்பண்ணை.

(H. 21)

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
### அறைக்கீரைவிரைத்தைலம்.



இதன் குணம்:

பித்த மேகசீரான சிரசுக்கேறி அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதிஞல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், சொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்ருய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணிஞல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையுங் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்துஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாருது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியுபாக்சுரர்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.

(Y. 26.)

### "சுதேசி".

தேசிய வாரமிருமுறைப்பத்திரிகை, பத்திராதிபர். பி. கோதண்டராமன் எம். ஏ. பி. எல். தற்கால அரசியலைப்பற்றியும், சமுதாய விஷயங்களைப்பற்றியும், சுருக்கமாயும், விளக்கமாயும் உலகத்தில் நடைபெறும் விஷயங்களைப்பற்றியும் அறியவேண்டியவர்கள் இப்பத்திரிகையைப் படிக்கவேண்டும்.

சந்தாவிபரம.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூபா 7. | |
| 6 மாதச் சந்தா | ரூ. 3 | அணு 12 |
| 3 மாதச் சந்தா | ரூ 2 | |
| 1 மாத சந்தா | | அணு 11 |

14, வாணியர் தெருவு,
சென்னை.

இனும்! இனும்!! இனும்!!!

### இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் நிமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம்
குணமில்லையென்று ருபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கோடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமயாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிருர்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினுல் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சினேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இறைத்து பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு | விலை | ரூபா | | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, | ,, | ,, | ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, | ,, | ,, | ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினுல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்:

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னுற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA).

(H. 27.)

### புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணு 1
5. தசகாரியம் அணு 5

ச. செல்லமைய்யர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம். (H. 26.)

### திறமானமங்களூர்ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்ருேடுகள், பீலியோடுகள், கண்ணுடியோடுகள், சித்திர சகிதமானஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஒட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.

(H. 23).

### பித்தளை டம்ளர்கள்.

இந்திய கைத்தொழிலை ஆதரியுங்கள்!

உயர்ந்த பித்தளைத் தகட்டினுல் செய்யப்பட்டது. அழகான நகாஸ் வேலைகள் செதுக்கப்பட்டதோடு பார்வைக்குப் பழபழப்பாகவிருக்கும்.

நகாஸ் வேலை செய்யாத சாதா டம்ளர்களும் உண்டு.

நகாஸ் டம்ளர் 3கொண்ட செட் 1க்கு ரூபா 1/12.
சாதா டம்ளர் 3 கொண்ட செட் 1க்கு ரூபா 1/9.



கே. எஸ். முத்தையா & கம்பனி,
"வில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

### "ஸ்ரான்டேர்ட்" கொழுக்கியோடுகள்.

(Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வடஇலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்தள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்ருகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எம்மிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை.

(H. 25.)

### விளம்பரம்.

பெரும் தொகையான தேன் மெழுகு தேவை.

S. c/o பத்திராதிபர்.

(Mis. 474.)

### உபாத்தியாயர் வேண்டும்.

சிறுப்பிட்டிச் சைவவித்தியாசாலைக்கு முதலாம் அல்லது இரண்டாம் வகுப்புத் தராதலப்பத்திரம் பெற்ற பயிற்றப்பட்ட ஓர் உபாத்தியாயர் வேண்டும். விரும்பினேர் பின்வரும் விலாசத்துக்கு எழுதி விபரங்களை அறிக.

த. இராமநாதன்,
புத்தூர்.

(Mis 475,)

### புத்தக விளம்பரம்.

| (தபாற்செலவு வேறு): | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| டை சபாபருவவுரை | 2 | 25 |
| டை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சிஞர்க்கினியம் | 4 | 50 |
| டை சொல், சேனுவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| டை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| டை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
கொக்குவில், யாழ்ப்பாணம்.

(Q. 47.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:— இராத்தாட்சி வரு சித்திரைமீ 26உ வியாழக்கிழமை.

## ஸ்ரீமாந் அ. சபாபதி அவர்களின் தேகவியோகம்.

என்று இப்பத்திரிகையின் ஆசிரியத் தலைவரை வகித்துள்ளோமோ அன்று தொடக்கமாக, செயற்கரிய செயல்களைச் செய்த பெரியோர்களின் பிரிவைக் குறித்து அனுதாபப்படவேண்டியதாகிய கடமையும் இடையிடையே எமக்கு ஏற்பட்டுள்ளதென்பது உண்மையே. ஆனால் இப்பொழுது நிகழ்ந்துள்ள துக்க செய்தி வெளியிலோ தமிழ் நன் மக்களாகவுள்ளாரெல்லாரையும் எம்மையுந் திகிலுறச் செய்து பெருந் துக்கசாகரத்தில் ஆழ்த்தும் இயல்பினதாம். இந்த இலங்காதீபத்தில் உண்மையான சாதியபிமானி எவரோ உண்மையான சமயாபிமானி யெவரோ உண்மையான தேசாபிமானி எவரோ உண்மையான பாஷாபிமானி எவரோ உண்மையாகச் சுவதந்திரத்தை விரும்பி யுழைப்பவரெவரோ அவரெல்லாரும் ஸ்ரீமாந் சபாபதியவர்களின் பிரிவைக் கேட்டமாத்திரத்தே பேரிடி கேட்ட நாகம்போற் கலக்கமடைவரென்பது நிச்சயம். ஸ்ரீமாந் சபாபதியவர்கள் சென்ற நாற்பது வருடகாலமாக இலங்காதேவியின் ஈடேற்றத்தின் பொருட்டுப் பொதுவாகவும் தமிழ் நன்மக்களின் க்ஷேமத்தைக் குறித்துச் சிறப்பாகவும் உழைத்துவந்தவர். ஆரம்பத்தில இவருடைய நற்குணங்களும் இவர் செய்துவந்த தேச கைங்கரியமும் உலகோர்க்கு அதிகம் புலப்படாதிருந்தனவேனும் காலகதியில் இவர் தமிழ்மக்களுக்கு இன்றியமையாதவராகக் காணப்பட்டார்.

ஸ்ரீமாந் சபாபதியவர்கள் தம்முடைய பரோபகார சேவையை இற்றைக்கு முப்பத்துநான்கு வருடங்களுக்குமுன் நமது ஆங்கில இந்துசாதனவாயிலாகவே தொடங்கினர். இலங்கையிலுள்ள தமிழ் நன்மக்களின் ஈடேற்றத்திற்கு ஒரு சிறந்த சாதனமாகவுள்ள இந்துசாதனத்தின் ஆங்கில பத்திராசிரியராகி அன்று தொடக்கம் தமது மரணபரியந்தம் வேதனத்தையேனும் வேறு யாதும் பிரதி உபகாரத்தையேனும் கருதாது மிக்க அபிமானத்தோடு உழைத்துவந்தார். ஒரு சாதியாரின் ஈடேற்றத்தின்பொருட்டு உழைப்பதற்குப் பத்திரிகையே சிறந்த துணைக்கருவி யென்பது அவருள்ளத்தில் எக்காலத்துங் குடிகொண்டிருந்தது. தமிழ் நன்மக்களுக்கு வியாபார விஷயமாகவேனும் கமத்தொழில் விஷயமாகவேனும் ஏதுங் குறைகள் நேருங்கால் அக்குறைகளையெல்லாம அவ்வக்காலங்களிற் றமது பத்திரிகை வாயிலாக எடுத்துக் காட்டி அவற்றை அகற்றியபின்பன்றித் தாம் ஒருபோதுந் திருப்தியடையமாட்டார். இக்குறைகளை நீக்குவதற்கு இயன்றவரையிற் சாந்தமானவழிகளை அனுசரித்தலே இவர் சுபாவமாகும். "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையும் உருகப் பாயும்" என்பது இவர் கொள்கை. அரசாங்க அதிகாரிகளால் தமிழ் நன்மக்களுக்கு யாதும் இடர் விளைந்த சமயத்திலேயே இவருடைய அபிமானமும் ஆத்திரமும் அனுதாபமும் வெளிப்படும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் முகமன் பாராது அதிகாரிகளைக் கண்டித்தெழுதி அக்குறைகளை விரைவில் நீக்குவதற்குச் சிறிதும் பின்னிடமாட்டார். பின்வரும் பலாபலன்களை முந்தியே அறிந்துகொள்ளும் நுண்ணிய விவேகம் இவரிடத்திற் காணப்பட்டமையினால் அரசியல்விஷயமாகவும் சனசமூகவிஷயமாகவும் கஷ்டங்கள்வருதற்கு முன்னரே ஆகவேண்டிய மார்க்கங்களைக் கைக்கொண்டு அவை வாராதபடி தடுத்துவிடுவார். யாழ்ப்பாணவாசிகளுட் பெரும்பாலரின் சீவனமாகவுள்ள புகையிலை வியாபாரத்திற்குத் திருவிதாங்கூர் அதிகாரிகளால் இடையூறு நேர்ந்த சமயங்களிலெல்லாம் இலங்கை அரசினர் உதவியைக்கொண்டு திருவிதாங்கூர் அதிகாரிகளுடன் நயமாகவும் பயமாகவும் வாதாடி அவ்விடையூறுகளை நீக்கிவந்தார். சென்ற வருடத்தில் திருவிதாங்கூர் புகையிலைத் தீர்வை விஷயமாக யாழ்ப்பாணத்துள்ள வியாபாரிமாருக்கும் கமக்காரருக்கும் கஷ்டம் நேர்ந்தபோது ஸ்ரீமாந் சபாபதியவர்கள் இலங்கைத் தேசாதிபதியின் அனுமதிபெற்று, தமது விருத்தாப்பியத்தையும் தேகசுகவீனத்தையும் நோக்காது வடமாகாண ஏசண்டருடன் திருவிதாங்கூருக்குச் சென்று திருவிதாங்கூர் அதிகாரிகள் யாழ்ப்பாணப் புகையிலைத் தீர்வையை உயர்த்தியமையினால் இங்குள்ளார்க்கு நேர்ந்த கஷ்டங்களை யெடுத்து அவ்வதிகாரிகளுக்குச் சொல்லி அவர்கள் வாக்குறுதிபெற்று மீண்டனர்.

இவ்வாறான பரோபகாரச் செயல்களைக் கண்ட கமக்காரரும் வியாபாரிமாரும் நகரத்தாரெனப்படுஞ் செட்டிப்பிள்ளைகளும் இவர்மீது பேரபிமானமும் பெருமதிப்பும் பாராட்டி வருவாராயினர். ஸ்ரீமாந். சபாபதியவர்களின் பேரபிமானங் காரணமாகவே இலங்கைத் தமிழ்மக்களின் சிறந்த சாதனமாகிய இந்துசாதனம் இப்பொழுதுள்ள உந்நத பதவியை யடைந்துள்ளது. முப்பத்துநான்கு வருடகாலம் வேதனமின்றியும் சிரமத்தைப் பொருட்படுத்தாமலும் மிக்க திறமையோடும் ஒரு பத்திரிகையை நடத்திவந்தவரை உலகத்திற் காணுதலரிதினுமரிது. ஸ்ரீமாந். சபாபதியவர்களின் உண்மை நிலையை உணராதார் சிலர் அவர் சுயநலங்கருதி இதனை நடத்திவந்தனரென்று மௌட்டிகம் பேசுதலுங் கூடும். ஆனால் அது சுத்த அபத்தம். இற்றைக்குச் சில வருடங்கட்கு முன்னர் கொழும்பில் வெளிவந்த "சிலோனீஸ்" என்னும் தினசரி ஆங்கிலப் பத்திரிகைக்கு ஒரு சிறந்த தலைமைப் பத்திராசிரியர் வேண்டியிருப்ப அப்பத்திரிகை அதிகாரிகள் தக்க வேதனமுதவுவதாகவும் வேண்டிய சௌகரியங்களெல்லாஞ் செய்வதாகவுஞ் சொல்லி ஸ்ரீமாந். சபாபதியவர்களை அவ்வுத்தியோகத்தை ஏற்கும்படி பெரிதும் இரந்தபோதும் அவர் சிரித்து "யான் என் சிறிய காலத்தில் சம்பளத்திற்காக வேலைசெய்ததில்லை, அன்றியும் எனது 'இந்துசாதன'த்தை விடுத்து வரமாட்டேன்" என்று மறுத்தமையை யாம் நேரில் அறிவோம். பத்திரிகை விஷயமாக ஸ்ரீமாந். சபாபதியவர்கள் செய்துவந்த நன்மைகளை எடுத்துப் பார்க்க வயசாலும் அறிவாலும் அனுபவத்தாலும் கூடிய அபிமானிகள் நன்கறிவராதலின் அதிகஞ் சொல்லுதல் மிகையாகும். இவர் அக்காலத்தொடக்கம் தமது அந்தியகாலம்வரையில் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலனசபையின் சிறந்த ஒரு அங்கத்தவராகவிருந்து பத்திரிகையின் விருத்திக்காகவேண்டிய கருமங்களையுஞ்செய்து வந்தார்.

இரண்டாவதாக ஸ்ரீமாந். சபாபதியவர்களின் உள்ளத்திற் குடிகொண்டுள்ள தருமஸ்தாபனம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியெனலாம். இக்கல்லூரி அதிகார சபையின் அங்கத்தவராக ஆரம்பந்தொடக்கமிருந்து பின் காரியதரிசியாகி, சென்ற பத்துவருடகாலமாக இக்கல்லூரியின் மானேஜராக அதிக திறமையோடு கடமை பார்த்துவந்தார். இவர்காலத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் இதன் கிளை வித்தியாசாலைகளும் அடைந்த திருத்தங்கள் அளப்பில. இந்துக்கல்லூரிபோன்ற பெரிய ஸ்தாபனங்களை நிர்வகித்து நடத்தும்போது பல கஷ்டங்கள் நேர்வது சகசம். அவ்வாறான கஷ்டங்கள் நேர்ந்த காலங்களில் ஸ்ரீமாந். சபாபதியவர்கள் தமது நுண்ணிய விவேகத்தையும் முதிர்ந்த அனுபவத்தையும் துலாகோலன்ன நீதியையுந் துணையாகக்கொண்டு நயவார்த்தைகளாலும் பயவார்த்தைகளாலும் அக்கஷ்டங்களை இலகுவில் நீக்கிவிடுவார். எக்கருமத்திலும் ஆற்றுப்பட்சத்திலேயே தமது அதிகாரத்தைக் காட்டுவாரன்றி சும்மா திரியும்போதெல்லாம் தமக்குள்ள அதிகாரங்களை எண்ணி யெண்ணி இறுமாந்து திரியுங் குணம் இவரிடத்தில் எட்டுணையு மில்லையெனலாம். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி இப்பொழுது அடைந்திருக்கும் மேலான நிலைக்கு ஸ்ரீமாந். சபாபதியவர்களே விசேஷ காரணரென்பதை அறிவுடையோரெவரும் அங்கீகரிப்பர்.

யாழ்ப்பாணத்தில் சைவசமய விஷயமாகவும் சாதியின் ஈடேற்ற விஷயமாகவும் அரசியற் சுதந்திர விஷயமாகவும் வியாபார விஷயமாகவும் கமத்தொழில் விஷயமாகவும் உள்ள சபைகள் எவைகளோ அவைகளிலெல்லாம் ஸ்ரீமாந். சபாபதியவர்கள் விசேஷ ஸ்தானம் வகித்திருந்தார். யாழ்ப்பாணச் சங்கம், தமிழ் மகாசனசபை முதலிய பிரதான சபைகளில் ஸ்ரீமாந். சபாபதியவர்களே தலைமை வகித்தனர். எவ்வகையான சைவசமயக் கூட்டங்களும் வித்தியாவிருத்திக் கூட்டங்களும் உபகாரக் கூட்டங்களும் சோதிடக் கூட்டங்களும் வைத்தியக் கூட்டங்களும் மத்தியஸ்தர் கூட்டங்களும அரசினர் விசாரணைக் கூட்டங்களும் சால்வதி விலாசசபைபோன்ற சங்கீதசபைக் கூட்டங்களும் பிறவும் ஸ்ரீமாந். சபாபதியவர்களை யின்றிப் பூரணமடையா. யாழ்ப்பாணச் சுகாதாரசங்கம் யாழ்ப்பாண பட்டினபரிபாலனசங்கம் என்னு மிவைகளில் ஸ்ரீமாந். சபாபதியவர்கள் சிறந்த அங்கத்தவராகவிருந்து ஊர் நன்மையின்பொருட்டு உழைத்தனர்.

1917-ம் ஆண்டு ஸ்ரீமாந் சபாபதியவர்கள் இலங்கைச் சட்டநிருபண சபைத் தமிழ்ப்பிரதிநிதிகளிலொருவராக அரசினரால் நியமிக்கப்பட்டார். சட்டநிருபண சபை அங்கத்தவராகக் கடமை பார்த்த ஐந்துவருடகாலமுமே அவர் தமது தேச கைங்கரியத் திறமையைக் காட்டுதற்கு வாய்த்த காலமாகவிருந்தது. மகாயுத்தம் இலங்கைக் கலகம் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த கலகம் அரிசிப்பஞ்சம் என்னுமிவைகள் காரணமாக விளைந்த திகில் அக்காலத்ததேயாம். ஸ்ரீமாந் சபாபதியவர்கள் தமிழ்மக்கள் பொருட்டும் கலகத்தால் வருந்திய சிங்களச்சகோதரர் பொருட்டும் சட்டநிருபணசபையிற் பெரிதும் வாதாடி அனுகூலமடைந்து இரு சாதியினரின் மதிப்பையும் பெற்றனர். ஊரவர்களுக்கு இவர்மீது அதிக நம்பிக்கை யிருந்தமையினால் தமக்குநேருங்குறைகளை வீடுதேடிச் சென்று நேரே முறையிடத் தொடங்கினர். அரிசிப்பஞ்சகாலத்தில் எத்தனையோ ஏழைகள் அழுதகண்ணுஞ் சிந்தியமூக்குமாக அவரிடஞ் சென்று தங் குறையை முறையிட்டனர். இதனாலேயே தமது முதுமைப் பருவத்தையும் சிரமத்தையுஞ் சிந்தியாது டில்லி மாநகருக்கு இந்திய பிரதிகாவலரைக் கண்டு தமது நாட்டிலுள்ளார் படும் பஞ்சத்தை விண்ணப்பஞ் செய்யுமாறு அங்குச் சென்றார். தாஞ் சென்ற கருமஞ்சித்தியடைந்தபின் மீண்டு இங்கேவரும்போது சுகவீனத்தோடுவந்து சேர்ந்தார். சுகவீனகாலத்திலும் தமது கடமையை அனுகூலமாக நிறைவேற்றிவிட்டேன் என்ற மனத்திருப்தி அவரிடத்திற் காணப்பட்டது. அன்று தொடக்கம் ஸ்ரீமாந் சபாபதியவர்கள்நாமம் இங்குள்ள ஏழைகள் ஒவ்வொருவர்வாக்கிலும் இருந்தது. கதிர்காமயாத்திரை செய்வோர்க்கு முன் அரசினரால் [illegible] த்தடையை அகற்றச்செய்தவர். ஸ்ரீமாந் சபாபதியவர்களேயாவர்.

ஸ்ரீமாந். சபாபதியவர்களின் இடையறாத் தேசசேவையினால் சனங்கள்மாத்திரமன்றி அரசினரும் அவரை நன்குமதிக்கத் தலைப்பட்டனர். அரசினர் சமாதான நீதிவான்பட்டமளித்து அவரைச் சன்மானித்தனர். தமிழ்மக்களும் சிங்களரும் அரசியற் சுவதந்திரங்களை அடைதல்வேண்டுமென்னும் எண்ணம் ஸேர் அருணாசலமவர்களிடத்திலும் இவரிடத்திலுங் குடிகொண்டிருந்தது. புதிய திருத்தங்கள்பொருட்டும், இலங்கையிலுள்ள தமிழ்மக்களுக்குப் பல பிரதிநிதிகள் வேண்டுமென்ற விஷயமாகவும் இவ்விருவரும் பெரிதும் உழைத்து ஒருவாறு அனுகூலமடைந்தனர். ஸேர் அருணாசலமவர்களின் கொள்கைகள் பல இவருக்கும் உடன்பாடாக விருந்தன. ஸேர் அருணாசலமவர்களின் அகாலமரணமே ஸ்ரீமாந் சபாபதியவர்களுக்குப் பெருந் துயர் விளைத்தது. அங்கில இந்துசாதனத்தில் ஸேர் அருணாசலமவர்களின் தேகவியோகத்தைக்குறித்து இவர் எழுதிய விஷயமே கடைசிவிஷயமாகும். தமிழ்மக்கள் இனி அனுபவிக்கவிருக்கும் அரசியற் சுதந்தரங்களுக்காக உழைத்த சனத்தலைவர் சிலருள் ஸ்ரீமாந் சபாபதியவர்கள் ஒருவராவர்.

ஸ்ரீமாந். சபாபதியவர்களின் சமயபக்தி சாதியாசாரம் என்னுமிவைகளைப்பற்றிச் சொல்லுமிடத்து ஆங்கிலக்கல்வியும் நவநாகரிகமும் மேலைத்தேசத்தார் சகவாசமும் எள்ளளவேனும் இவருடைய புராதனகொள்கைகளையும் சமயாநுஷ்டானங்களையும் மாற்றமுடியாதிருந்தன. பழக்கவழக்கங்களும் அப்படியேயாம். இவர் சுத்த போஜனி. புகையிலைச் சுருட்டுத்தானும் பிடிக்கும்வழக்கமில்லை. தலையாளியிலுள்ள ஞானவைரவ சுவாமி கோயிற் கருமங்களை இவரே நிர்வகித்து நடாத்திவந்தார். சுபமுகூர்த்தமின்றி எவ்வகைக் கருமமுஞ் செய்யார். காசியாத்திரை கங்காஸ்நானம் முதலியன செய்தவர்.

ஸ்ரீமாந். சபாபதியவர்களுடைய குணாதிசயங்களெளிமேலாரவாலும் பின்பற்றத்தக்கன. சர்வகலாசாலைப்படிப்பு யாதுமின்றித் தம்முடைய அற்ப கல்வியைக் காலந்தோறும் விருத்திபண்ணிக், காலகதியில் அதிக கல்வித்திறமை வாய்ந்தவர்களுஞ் செய்ய முடியாத கருமங்களைச் செய்துவந்தனர். இடையறாவூக்கம் பிடிவாதம் அவையுந் தம்வசப்படுத்துதல் கிரமம் பாராட்டாமை முதலிய குணங்கள் இவரிடத்துள்ளன. சுருங்கச்சொல்லுமிடத்து:

"மெய்வருத்தம் பாரார்பசி நோக்கார் கண்டுஞ்சார், எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி, அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயினார்" என்ற ஆன்றோர் வாக்கிற்கு இவர் இலக்கியமாயுள்ளவரெனலாம். பெரியோர்களாயுள்ளாருட் பெரும்பாலாரிடத்தில் ஒவ்வொரு குறையேனுஞ்சொல்லத்தக்கதாயிருக்கும். இவருடைய அந்தரங்க சீவியமோ எவ்வகையானகளங்கமுமற்றதாகும்.

'நல்லார் குணங்களுரைப்பதுவு நன்றே' என்பதுபற்றி இங்குச்சிலகூறினேம். இலங்கை மாதா சில மாதங்களுள் ஸேர் அருணாசலம் ஸ்ரீமாந். சபாபதி என்னுந்தனது அரிய புத்திர ரத்தினங்களை இழந்தாள். தமிழ் மக்கள் தங்கள் சனத்தலைவர் இருவரைப் பறிகொடுத்தார்கள். ஆனால் இவ்விருவரும் தாங்கள் எடுத்தகருமத்தை நிறைவேற்றுமுற் செல்லவில்லை. தாங்கள் இட்ட விதை முளைத்து வளர்ந்து கிளை பரப்பி விருட்சமாகிப் பூத்துக் காய்த்துப் பழுக்குந் தருணத்திலேயே பழங்களைத் தங்கள் சகோதரரும் பிற்சந்ததியாருமுண்ண விடுத்துத் தாங்கள் மாத்திரஞ் சென்றுவிட்டார்கள்.

ஸ்ரீமாந் சபாபதியவர்களின் வாழ்க்கையைத் திருஷ்டாந்தமாகக்கொண்டு மற்றுஞ்சனத்தலைவரும் இளைஞரும் கற்றுக்கொள்ளவேண்டியன பலவுள. "அசாத்தியம்" என்றசொல்லை அகராதியிலிருந்து முற்றாயகற்றிவிடுதல் வேண்டுமென்னுங் கருத்தமைந்த ஆங்கிலபழமொழி யொன்றுண்டு. மனமுண்டானால் இடமுண்டென்பது தமிழ்ப் பழமொழி. ஆரம்பத்தில் அதிக கல்வி யில்லாதவராக விருந்தாலும் சுதந்திர வாழ்க்கை யுடையவராயும் விடாமுயற்சி யுடையவராயும் எவ்வகையிடையூறுகள் நேர்ந்தவிடத்தும் மனத்திடமுள்ளவராயும் பரோபகார சிந்தை பூண்டு மனப்பூர்வமான அபிமானத்துடன் ஒருவர் உழைப்பரேல் அவர் சகல கருமங்களிலும் அனுகூலமடைந்து எவராலும் போற்றப்படுவர். அப்படிப்பட்டவரே செத்துஞ் சாகாதவராவர்.

## ஸ்ரீமாந். அ. சபாபதியவர்களின் தகனக் கிரியை.

சென்ற செவ்வாய்க்கிழமை அதிகாலையில் ஸ்ரீமாந். சபாபதியவர்களுடைய பிரேதம் வழலாயிலுள்ள தமது சுகஸ்தானத்திலிருந்து தலையாளிக்குக் கொண்டுவரப்பட்டது. இத்துக்க சமாசாரம் யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலும் தீவிரமாகப்பரவி எல்லோரையும் தன்னுள் அமிழ்த்தியது. செவ்வாய்க்கிழமை காலை தொடக்கமாக யாழ்ப்பாணத்தின் நாலு பக்கங்களிலுமுள்ள பிரபுக்கள் கூட்டங் கூட்டமாகத் துக்கசாகரத்தில் அமிழ்ந்தினவர்களாய் வந்து குழுமினர். நேற்றுப் பகல் 2 மணியளவில் ஸ்ரீமாந். சபாபதி அவர்களுடைய பிரேதக்கிரியையானது வெகு சனமத்தியில் சமயாசாரமுறைப்படி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அத்தருணம் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைப் பிரபுக்களும் இந்துக்கல்லூரி ஆசிரியரும், இந்துக்கல்லூரியின் கிளைப்பள்ளிக்கூடங்களின் ஆசிரியரும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலுமிருந்து வந்த பிரபுக்களும் உத்தியோகத்தரும் ஊரவர்களும் நகரச் செட்டிப்பிள்ளைகளும் மாணவர்களும் குழுமியிருந்தனர்.

ஸ்ரீமாந். சபாபதியவர்களுடைய பிரேதத்தை மலர்களினாலும் மாலைகளினாலும் அழகுற அலங்கரிக்கப்பட்ட இரதத்தின்மீது வைத்து, பன்னூற்றுவர் முன்னும்பின்னும் செல்ல, அந்த ரதம் மெல்லென நகர்ந்து சுடலையை அடைந்தது. அங்குச் சிறிது முந்தியே வந்து எதிர்பார்த்துநின்ற வடமாகாண ஏசண்டர் மிஸ்டர் கிருதர் அவர்களும் உதவி ஏசண்டர் ஸ்ரீ செ. இராசநாயகமுதலியாரவர்களும், வடமாகாணத் தலைமை டக்டரும், கச்சேரிப் பிரதமமுதலியாராகிய ஸ்ரீ எஸ். இராமலிங்கமுதலியாரவர்களும், இலங்காபிமானிப் பத்திராதிபரும் பட்டினபரிபாலன சங்கச் சபாநாயகருமாகிய ஸ்ரீ ஆ. கனகரத்தினம் அவர்களும் மிஸ்டர் பொன்னுச்சாமி மேதர் அவர்களும் பிரேதத்தை இரதத்திலிருந்திறக்கி முறைப்படி பின்வலம்வந்து சந்தனக்காஷ்டத்தினால் அமைக்கப்பெற்ற சமத்தின் மீது வைத்தனர். ஏஜண்டர் தொடக்கம் அங்கு நின்றோரனைவரும் வாய்க்கரிசியிட்டனர். அதன்பின் அவர் சிரேஷ்ட புத்திரனாகிய ஸ்ரீ சரவணமுத்து சமத்தைப் பின்வலமாக வந்து குடமுடைத்துக் கொள்ளி வைத்தார்.

ஸ்ரீமாந். சபாபதியவர்களை இழந்து ஆற்றொணாத் துயரக் கடலுள் ஆழ்ந்திருக்கும் அவர் பத்தினியார் புத்திரிருவர் சகோதரர் சுற்றமித்திரர் தமிழ்நன்மக்கள் ஆகிய எல்லாருடனும் யாமும் பெரிதும் அனுதாபமுறுகின்றேம்.

## உலகம் பலவிதம்.

(முற்றொடர்)

"என்னப்பா, இவன் தம்பியைப்பற்றிப் பல முறைப்பாடுகள் கேள்விப்படுகிறேன். இவன் பள்ளிக்கூடத்திலே படிக்கிறனில்லையாம். இவனுக்குக் கூட்டாளிமார் பலராம்; எந்தத் தேய்த்தண்ணீர்க் கடையிலும் எந்தக் கூத்துக் கொட்டகையிலும் எந்தத் திருவிழாக் கூட்டத்திலும் எந்தச் ஸேர்க்கஸ் கம்பனியிலும் எந்தக் கடற்கரையிலும் எந்தத்தெருவிலும் எந்தச் சந்தியிலும் இவனைக்காணலாமாம்; போன சனிக்கிழமை பொழுதுபடும் நேரத்தில் தன்வகுப்புப் பையனொருவனுக்கு அடிக்க வேண்டுமென்று ஆட்சேர்த்துக்கொண்டு கோப்பிக்கடை முச்சந்தியில் நின்றானாம். இவன் எங்கள் குடிக்கு வழிக்கு இல்லாதவனாகப் பிறந்திருக்கின்றானே; இவைகளையெல்லாங் கேள்விப்பட்ட நேரந் தொடக்கம் எனக்குத் தலையொருவிதமாகவிருக்கின்றது; ஐயோ, உலகத்திலே கஞ்சிக்கு வழியில்லாத பிள்ளைகள் தானும் எவ்வளவு கவனமாகப் படிக்கிறார்கள்; இவன் குடிக்குப் பிறந்து செடிக்குத் தலைவைக்கிறானே; இது நாம் முன்னே செய்துகொண்ட கர்மமா, இவனாலே நாம் பரதேசம்போக வேண்டியிருக்கிறது; இங்கிருந்தால் உள்ள மரியாதையும் கெட்டுப்போம்; நாளைக்குத் தெருவாலே போபவனும் நம்மைக் கண்டு தோளிற் சால்வை யெடுக்கமாட்டான்; இவனைப் பிள்ளையாகப் பெற்றதிலும் எங்களுக்குப் பிள்ளையில்லையென்றிருந்துவிடலாமே; "கொச்சைமக்களைப் பெறுதலின் அக்குடிஎச்சமற்றேமாந்திருக்கை நன்றே" என்று சொல்வார்கள்; என்னவோ, எனக்கொன்றுந் தெரியாது நீ அவனுக்குப் புத்திசொல்லி ஏதுமானால் திருத்திப்பார், நான் ஏதுஞ் சொல்லப் போனால் அவனும் முரட்டுத்தனமாய் மறுமொழி சொல்லுவான்; உடனே எனக்குச் சன்னதம் வந்துவிடும்" என்று இராசதுரையின் தகப்பன் தன் மனைவிக்குச் சொல்லிப் பெருமூச்சுவிட்டுப் பெரிதுந் துன்பப்பட்டார்.

* * *

"நீங்கள் இப்படித்தான், ஆரும் எரிச்சல் புகைச்சல்கொண்டு ஒன்றைப் பத்தாகச் சொல்லி மூட்டிவிட அதைக் கேட்டுக்கொண்டு வந்து அவனை வாயில்வந்தபடி ஏசுகிறீர்கள்; அவன் தலைமிதந்த பிள்ளை, இப்படி நீங்கள் ஏச அவன் எங்கேனும் ஓடிவிட்டால் என்ன செய்வது, அவன் தன்காலத்திலே திருந்திவிடுவான்; நீங்களும் உந்த வயசிலே பெரும் புளுகியென்று எனக்கு மாமி சொல்லக் கேட்டிருக்கிறேன்; அவன் என்ன சூதுவிளையாடுகிறானா, தாசிவீட்டுக்குப் போகிறானா, களவெடுக்கப் போகிறானா, குடிக்கிறானா, செல்லப்பிள்ளையானதால் நாலு பிள்ளைகளோடு கூடித் தேய்த்தண்ணீர்க் கடைக்குப் போய்விட்டானும், கூத்துப் பார்த்துவிட்டானும், பின்னேரத்தில் உலாத்துக்குப் போய்விட்டானும், இப்படியெல்லாஞ்செய்ய இயலாதவர்கள் பொறாமைப்பட்டு உங்களுக்கு ஓடிவந்து மூட்டிவிட நீங்கள் ஆவேசங்கொண்டு அவனை வாயில்வந்தபடி வைதுவிட்டு ஒப்பாரி சொல்லுகிறீர்கள்; நீங்கள் சும்மாவிருங்கள், இன்றைக்கு அவன் வரட்டும் நான் எல்லாம் கேட்கிறேன் என்று மனைவி சமாதானஞ் சொல்லப்புறப்பட்டாள்.

* * *

"எடி பைத்தியமே, நீதானே அருமந்த பிள்ளையைப் பழுதாக்கிவிட்டாய்; மற்றவர்கள், எரிச்சல் புகைச்சல் கொண்டு எனக்கு மூட்டுகிறார்கள் என்கிறாய்; என்ன உன் மகனுடைய வித்துவத்திறமையைக்கண்டு எரிச்சற்படுகிறார்களா? யோக்கியமான நடையையிட்டுப்புகைச்சல் கொள்ளுகிறார்களா? பெரியவன்வீட்டுப் பிள்ளை அநியாயமாகக் கெட்டுப்போகிறதே என்று பரிதாபப்பட்டுத்தானே அவர்கள் வந்து எனக்குச் சொன்னார்கள்; ஆரோ ஒரு பையனை அடிப்பதற்கு ஆட்சேர்த்துக்கொண்டு நின்றானென்றும், அந்தப்பையன் நல்லகாலத்தினால் அன்று அந்தவழியால் வரவில்லையென்றும் எங்கள் கப்பையா அண்ணன்தானே சொன்னார்; அவரும் வீண்கதை பேசுபவரா, இனி அவன் கொஞ்சமும் படிப்பதில்லையென்று பெரிய வுபாத்தியாயர் நேற்றுச் சொன்னார்; அவன் சூது விளையாடுகிறானோ களவெடுக்கிறானோ என்றுஎன்னுடன் நீ நியாயம் பேசுகிறாய்; கொஞ்ச நாட் போக உன் மகன் பன்றியோடு கூடிய கன்றும் ஏதோ தின்னுமென்றபடி அந்தக் கெட்ட கூட்டத்தவருடன் கூடி அவைகளையுஞ் செய்யமாட்டானென்பது உனக்கெப்படித்தெரியும், இப்பொழுதே அவன் செய்யுங்குற்றங்களைக் கண்டித்து திருத்தாவிட்டால் நாளைக்கு அவன் கதி என்னவாகும்? இப்படிவிட்டாற் கிரங்கு முற்றிப் பௌத்திரமானவாறல்லவாமுடியும்; கடைசியாய் இவன் மறியலுக்கும் போக வேண்டிவரும்; அந்த நேரந்தான் நீ நெஞ்சிலே குத்தியழுவாயாக்கும்; எனக்கென்ன இவனைப்பற்றி இன்னமும் ஏதும் கேள்விப்படுவேனோயாகில் என்னை நீ கண்ணிற் காணமாட்டாய்" என்று தகப்பன் மிக்க ஆத்திரத்தோடும் துயரத்தோடுஞ் சொன்னார்.

* * *

மனையவள் மனம் வருந்தி "உங்களுக்குக் கோபம் வந்தால் சொல்வதென்ன விடுவதென்ன என்று தெரியாது. நீங்கள் பிள்ளையோடு கோபித்துக்கொண்டு பரதேசம் போனால் எங்கள் நிலைபரம் என்னவாகும்; உலகமென்ன சொல்லும்; நான் அவனை இப்படியெல்லாம் செய் என்று சொன்னேனா; படிதம்பி, படிதம்பி என்று நான் அவனைப் படிக்கச் சொன்னால் அவன் நான் என்னசெய்வதம்மா, படிக்கவென்று புத்தகத்தைத் திறக்கத் தலையிடி வந்திடுகிறதென்று சொல்லுகிறான்; அவனுக்கு உவ்வளவுபடிப்பும்போதும், அவன் படித்துப் பிறவூரிற் போய் உத்தியோகம் பார்க்கவேண்டாம்; எங்கள் கணக்கப் பிள்ளைக்குக் கொடுக்கிற சம்பளத்தை எங்கள் பிள்ளைக்குக் கொடுத்தால் அவன் அந்தவேலையையும் பார்த்துக்கொள்வான்; அந்தச் சம்பளம் அவனுக்கும் அவனுக்கு வருபவளுக்கும் வயிறுகழுவப் போதாதா, பின்பு எங்கள் பொருள் பண்டமெல்லாம் அவனுக்குத்தானே, இப்படியெல்லாமிருக்கச் சும்மா, அவனையிட்டு ஏன் கரைச்சற்படுகிறீர்கள்" என்று சொல்லிக் கண்ணீர்விட்டழுதாள்.

* * *

"எடி மூத்தவளே, ஏன் அழுகிறாய், என் வயிற்றெரிச்சலைச்சொன்னால் அதற்கு நீ ஒப்பாரி சொல்லத் தொடங்குகிறாய்; ஆத்திரத்தினாலே சொன்னேனேயன்றி நான் ஏன்பரதேசம் போகிறேன்; இந்தச் சங்கடமெல்லாம் வேண்டாம், உன் அண்ணனிடம் சொல்லி வருகிற வைகாசியில் அவனுடைய விவாகத்தை நிறைவேற்றி வைப்போம்; உன்மருமகள் ஒரு குணவதி, அவள்தான் இவனை நல்லவழிக்குக் கொண்டுவரத்தக்கவள், உன்மகனுக்கும்இதைச் சொல்லி அவனுடைய எண்ணமென்ன வென்று தட்டிப்பார்" என்று நாயகன் மனைவிக்குச் சொல்ல அவள் கண்ணீரைத் துடைத்து ஒருதாஞ் சிரித்து "அது நல்ல புத்திதான், அன்று வருஷப்பிறப்புக்கு இங்கே வந்தபோதும் அண்ணனும் மச்சாளும் இதைப்பற்றிக் கேட்டார்கள்; எனக்குஞ் சம்மதந்தான், தம்பிக்குச் சொன்னபோது அவன் ஒன்றுஞ்சொல்லாமல் ஏதோமனசுக்குள் வைத்துக் கொண்டு விழுங்கினான், நான், என்ன தம்பி உன்விருப்பத்தைச் சொல்லு என்று நெருக்கினபோது, அவனுக்கு வள்ளியம்மையில் எல்லாவிஷயத்திலும் பிடிப்புத்தான்; ஆனால் இந்தகாலையில் மாதிரியாக நடந்துகொள்ளத் தெரியாதென்ற ஒரு குறைதான் சொன்னான்" என்றாள். தகப்பனுக்கு அடங்காக் கோபம் பிறந்தது. "அந்த மூதேவியார் என்ன சொன்னார்; அவளுக்கு இந்தகாலையில் மாதிரியாக நடக்கத் தெரியாதென்றாரா; இந்த காலையில் மாதிரியாக நடக்கும் பெண்களின் யோக்கியதையைப்பற்றி உனக்கு முந்தியும் பலமுறை சொல்லியிருக்கிறேன்; இப்பொழுது அவைகளைப்பற்றிக் கேட்டு வீணாக எனக்குக் கோபத்தை மூட்டாதே; நிச்சயமாக, வைகாசிமாசம் சடங்கென்பதை அவனுக்குச் சொல்லு; உன் அண்ணனுக்குஞ் சொல்லி ஆயத்தப்படுத்து" என்று சொல்லி முடித்தார்.

(வரும்)

## சமாசாரம்.

கிருஷித்தொழிற் பாடசாலை.—கிருஷிப்பகுதித் தலைவராகிய மிஸ்டர் ஸ்றொக்டேல் அவர்கள் 14 வயதுக்குட்பட்ட வறியபிள்ளைகளுக்குக் கிருஷித்தொழிலைப் பயிற்றும்பொருட்டு, யாழ்ப்பாணத்தில் ஓர் கிருஷித்தொழிற் பாடசாலையை ஸ்தாபிக்கும் நோக்கம் கொண்டவராய் இருக்கின்றனர்.

ஆயுர்வேத வைத்திய சங்கப்பரிசுகள்.—சமீபத்திலே கொழும்பில் நடைபெற்ற சர்வ இந்திய ஆயுர்வேத வைத்திய சமாஜத்தில் இலங்கைவைத்தியருள் அநேகர் தாரதரப்பத்திரமும்பதக்கமும்பரிசளிக்கப்பெற்றனர். யாழ்ப்பாணம் வைத்தியபதிஸ்ரீ வெ. சிவசுப்பிரமணிய பிள்ளையவர்களும், கொழும்பு பிரமஸ்ரீ. எம். சிவசாமி ஐயரவர்களும் வெள்ளிப்பதக்கம் பரிசளிக்கப்பெற்றனர்.

மோட்டர் பஸ் பிரயாணியின் மரணம்:—சென்ற ஏப்பிரல் மாதம் 30உ திரிகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்குச் சென்ற மொட்டோர்பஸ் வண்டியிலுள்ள ஒருபிரயாணி இடைவழியில் இறந்துவிட்டனர்.

ஒரு தனிச்சாரதி பூமியில் வீழ்த்தப்பட்டு இறந்தான்.—கொழும்பிலே ஒரு குதிரை வெருட்சியுற்று மொறிஸ் வீதிவழியே கோட்டையைநோக்கி ஓடியபொழுது சாரதி வண்டியிலிருந்து நிலத்தில் வீசப்பட்டுப் படுகாயமுற்றுச் சிறிது நேரத்தில் உயிர் துறந்தான்.

அங்கோடாவில் ஓர் பைத்திய வைத்தியசாலை.—அங்கோடாவில் பைத்தியகாரருக்கு ஓர் வைத்தியசாலை அமைப்பதற்கு அரசினர் தீர்மானம் செய்திருக்கின்றனர். டை வைத்தியசாலைக் கட்டடவேலை பகிரங்கவேலைப்பகுதியாரால் விரைவில் ஆரம்பிக்கப்படும்.

கொம்பனித்தெருப் புகைரதஆபீசிலுள்ள பணம் திருடப்பட்டது.—சென்ற சனிக்கிழமை இரவு கொம்பனித்தெரு ஆபீஸிலுள்ள உத்தியோகத்தர் தமது கடமைமுடித்து வீட்டுக்குச்சென்றபின் சிலகள்வர் ஆபீஸில் கூரையைப்பிரித்து கபிதுவழியாக உள்ளேசென்று மேசைக்குள்ளிருந்த 164 ரூபா 25 சதத்தில் 156 ரூபா 25 சதத்தைத் திருடிக்கொண்டு மறைந்தனர். அப்புகைரத ஆபீஸில் இரு புகைரதச் சேவகர்கள் கடமைபார்த்துக் கொண்டிருப்பவும், அதிசமீபத்திலே புகைரதப் பாதையை ஊடறுத்துச் செல்லும் தெருக் கதவோரத்தில் ஒரு பொலிஸ்வீரன் காவல்புரிந்து நிற்பவும் இவ்விதமான திருட்டு நிகழ்ந்தமையே பேராச்சரியத்தை விளைப்பதாகும்.

## அகில இந்திய ஆயுர்வேத மகாநாடு.

### அக்கிராசனாதிபதியின் பிரசங்கம்.

#### ஆயுர்வேதமே நமக்கேற்றமுறை.

நாம் வைதிக வாழ்க்கை முறையை விட்டுவிட்டதுடன், உடை, உணவு, பழக்கம் முதலியவைகளிலும் மேனாட்டு அப்பியாசங்களைக் கைப்பிடித்துக்கொண்டுவிட்டதால் நமது தேகஸ்திதி கெட்டுப்போய்க் கிடக்கிறது. ஆயுர்வேத சாஸ்திரங்களில் கூறியுள்ள உதகிருஷ்டமான சரீராரோக்கிய முறைகளைக் கைவிட்டு, வாழ்வின் காலத்தைக் குறைத்துக்கொண்டு விட்டோம். சுலபமாகவும் நயமாகவும் கிடைக்கக்கூடிய பல குச்சிகளை நாம் உபயோகிக்காமல், மிருகங்களினுடைய தேகத்தினாலாய புருஷ்களை உபயோகித்து வருவதால் நமது சரீரத்தில் விஷம் சம்பந்தித்து வருகிறது. பற்பொடிகளையும், பல் துலக்கும் பசைகளையும் நாம் உபயோகித்து வருவதால் பற்களுக்கு அபாயமேற்படுகிறது. பற்களின் அழிவினால் கண் திருஷ்டியும் மழுங்கிவருகிறது. நம்முடைய சரீரத்திற்கு ஒத்துக்கொள்ளாத உணவுகளைப் புசித்துவருகிறோம். மேனாட்டு வைத்தியர்களும் உத்வேகத்தை உண்டுபண்ணக்கூடிய பதார்த்தங்களையும், மிளகு, கடுகு, ஊறுகாய், வெங்காயம், தேயிலை, காப்பி இவைகளையும் உபயோகிப்பது அநுசிதமென்று சொல்லியிருந்தபோதிலும் நாம் அவைகளை உபயோகித்து வருகிறோம். நமது ரிஷிகளுக்குப் பிரதான ஆகாரமாகவிருந்த பழவகைகளையும் நாம் ஒதுக்கித் தள்ளிவருகிறோம். இது ஆடம்பர வாழ்க்கையை விரும்புங் காலமாகிவிட்டதால் வியாதிகளும் பலஹீனமும் ஏற்படுகின்றன. பிடிப்பான உடைகளைத் தரித்துக்கொள்வதால் நமது சரீராரோக்கியத்திற்கும், முக்கியமாக கர்ப்பஸ்திரீகளின் சரீராரோக்கியத்திற்கும், பாதகமுண்டாகின்றது. இதனால் சிசுக்கள் மரணவிகிதம் அதிகமாக விருப்பதைக் கண்டு நாம் அதிசயப்படுவதற்கில்லை. விவாகம், விதவாவிவாகம் முதலிய விஷயங்களில்கூட மேனாட்டினர் தங்களுடையதவறுகளை உணர்ந்து நமது ரிஷிகளுடைய கட்டளைகளின் மகிமையை அதியத்தலைப்பட்டு வருகின்றனர். ஆகவே ஆயுர்வேத வைத்திய முறையே நமக்கேற்றதென்பதை நான் அதிகமாக வற்புறுத்தத் தேவையில்லை.

#### ஆயுர்வேதமும் ரணசிகிச்சையும்.

இவ்விதம் முற்காலத்தில் ஆயுர்வேதமுறை சிறப்புற்றிருந்தபோதிலும், தற்காலம் அதன் நிலைமை திருப்திகரமாக இருக்கவில்லை. அதைப் பரிகரிக்கவழி தேடுமுன்வியாதிகளின் காரணங்களைக் கண்டறிந்து ஆயுர்வேத வைத்திய முறைஏன உபயோகப்படாமற் போய்விட்டதென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டும். ஆயுர்வேத சாஸ்திரத்தில் ரண சிகிச்சை முறைதான் கெட்டுப்போயிருக்கின்றது. அதை முதலில் கவனிப்போம். ஹிந்துக்களுடைய மதசம்பந்தமான உணர்ச்சி காரணமாக பிரேதங்களைப் பரிசோதனை செய்யும் வழக்கம் கைவிடப்படலாயிற்று. சரீர அசுத்தம் ஏற்பட்டுவிடுமென்ற பயத்தினால் உடற்கூறுக்குரிய ஞானம் பரவாமல் தடைப்பட்டு ரண சிகிச்சை முறையும் கைவிடப்பட்டது. மனுஸம் ஹிதையில் டாக்டர் கையிலிருந்து ஒன்றையும் வாங்கிச் சாப்பிடக்கூடாதென்றுசொல்லப்பட்டிருப்பதானது ரணசிகிச்சை செய்பவர்களையே குறிப்பிடுவதாகவேண்டும். இதனாலும், உள்ளுக்கும் வெளிக்கும் ஔஷதங்களைப் பிரயோகம்செய்து சிகிச்சை செய்யும் முறை ஏற்கனவே பிரபல்யமாகவிருந்தாலும் ரண சிகிச்சைமுறை வீழ்ச்சியடையலாயிற்று. நமது தேசத்தில் ஆயுர்வேத வைத்திய முறை இரு அறைகளிலும் அழிவுற்றதற்கு நமது தேசத்தின் ராஜ்ய பொருளாதார நிலைமையும் முக்கிய காரணமாக விருந்திருக்கிறது.

#### ஆயுர்வேத முறை மலினமடைந்ததற்குக் காரணம்,

ஆயுர்வேத முறைக்கு அரசாங்கத்தார் ஆதரவளிக்காததும், மேனாட்டு வைத்தியமுறையை அரசாங்க முறையாக வைத்துக்கொண்டதுமே அது வீழ்ச்சியடைந்ததற்குக் காரணமென்று சென்னையில் பரிசீலனை செய்த கமிட்டியார் சொல்லியிருக்கிறார்கள். இவைக ளிரண்டும் முக்கிய காரணங்களானபோதிலும் வேறுகாரணங்களு மிருக்கின்றன. கவர்ண்மேண்டார் நமதுதேசத்திற்கொத்தமுறையைக் கைவிட்டுப் பிறதேசமுறையை ஆசரித்து வந்தது தவறென்பது வாஸ்தவமே. ஆனால் பிறரைக்கண்டனம் செய்யும் உத்வேகத்தில் நாம் நம்முடையகுறைகளையும் மறந்துவிடக்கூடாது. ரிஷிகளுடைய வாக்கியங்களுக்கு ஹிந்துக்கள் அதிகமதிப்பு வைத்திருப்பது ஆயுர்வேதத்தின் தற்கால ஸ்திதிக்கு முக்கிய காரணமாகும். இதன்பலனாக ஆயுர்வேதகிரந்தங்கள் அபிவிருத்தியடையாமல் ஒரே பாணியாக இருந்து வருகின்றன. இப்பால் ஆயுர்வேத நூல்களை எழுதியவர்களும் சரகரும், சுசருதரும்எழுதியிருந்ததையேபெயர்த்தெழுதி வந்திருக்கிறார்கள். அந்தக்காலத்தில் அச்சடிக்கும் முறை இருந்து வராததால் தலைமுறை தலைமுறையாக அந்தச்சாஸ்திரமானது வாய்ப்பாடமாகவே வந்திருக்கிறது. ஒருவராவது அதிலுள்ள பிழைகளைத் திருத்த முயலவில்லை. அதன் பலனாக சந்தேகாஸ்பதமான இடங்களுக்கு சந்தேகாஸ்பதமாகவும் தவறாகவும் உள்ள வியாக்கியானங்கள் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. பிற்காலத்தில் நூல்களை எழுதியவர்களுக்குள் அபிப்பிராயபேத மேற்பட்டிருக்கிறது. இவ்விதமாக நமது வைத்திய சாஸ்திரமானது அபிவிருத்தியடையாமல் ஒரே விதமாக இருந்து வந்துவிட்டது. நமது ரிஷிகளுடைய மகிமையை நான் ஒப்புக்கொள்ளுகிறேனாயினும் எந்தச்சாஸ்திரமும் காலத்திற்குத் தகுந்தவாறு திருத்தப்பட்டுவராத வரையில் பிரயோஜனப்படாதென்பதை நான் சொல்லித்தானாக வேண்டியிருக்கிறது. "புத்தகத்தில் கண்டவியாதிகளைக் கொண்டு ஒருவர் எந்த வியாதியால் அவதிப்படுகிறாரென்று சொல்ல முடியாததற்காக வைத்தியர்கள் அவமானப்படக்கூடாது. எல்லாவியாதிகளையும்நூல்களில் குறிப்பிடவில்லை! ஒரே தோஷத்தினால் பலவித வியாதிகள் ஏற்படலாம். வைத்தியர்வியாதியின் தன்மையையும் இடத்தையும் கவனித்துத் தகுந்த சிகிச்சை செய்ய வேண்டும்" என்று சரகரும் வாக்படரும் சொல்லியிருக்கின்றனர். நாம் புத்திசாலித்தனமாக வியாதிகளின்தன்மையை ஆராய்ச்சி செய்யாமல், குருட்டுத் தனமாக ஆயுர்வேத நூல்களைப் பின்பற்றி வந்ததால் பல பிழைகள் ஏற்பட்டு விட்டன. (வரும்)

"சுதேசமித்திரன்"

## அடைவுநகைவிற்பனவுவிளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் தலவாக்கொல்லை 127-ம் நம்பர்க் கடையில் க. தம்புவிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போ தவணைதப்பி டை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்க வேண்டிய நகைகளின் விபரம்:—

| நம். | மீ | உ | ரூ. | ச. | நகை விபரம் |
|---|---|---|---|---|---|
| 1921ஞு | | | | | |
| 18 | தை | 3 | 23 | 00 | மேலீடு சோடி 1 |
| 103 | | 26 | 10 | 00 | மோதிரம் 2 |
| 128 | மாசி | 1 | 17 | 00 | மேலீடு சோடி 1 |
| 162 | | 7 | 18 | 00 | மோதிரம் 2 |
| 618 | ஆடி | 6 | 7 | 00 | ஒன்னைப்பூ2, மணி 4, வெ. அரைஞாண் 1 |
| 678 | | 19 | 9 | 00 | கடுக்கன் சோடி 2 |
| 745 | ஆவ. | 6 | 12 | 00 | வெள்ளி அரைஞாண் 1, தண்டை சோடி 1 |
| 798 | | 19 | 9 | 00 | கடுக்கன் சோடி 2 |
| 1005 | ஐப். | 1 | 9 | 00 | சிமிக்கிசோ1, மூக்குத்1 |
| 1052 | | 10 | 20 | 00 | ஆவடி 1 |
| 1195 | கார் | 11 | 10 | 00 | ஆவடி 1 |
| 1196 | | 12 | 9 | 00 | ப. காப்பு சோடி 1 |
| 1241 | | | 25 | 00 | மேலீடு சோடி 1 |
| 1357 | மார் | 18 | 62 | 00 | அட்டியல் 1 |
| 1363 | | 20 | 10 | 00 | காப்பு சோடி 1 |
| 1922ஞு | | | | | |
| 1639 | மாசி | 28 | 25 | 00 | முடிச்சுக்குத்தி 2, தண்டை 2 |
| 1702 | பங் | 13 | 14 | 00 | முடிவைத்த பவுண் 1 |
| 1723 | | 20 | 10 | 30 | கல்லு மோதிரம் 1 |
| 1784 | சித் | 5 | 8 | 50 | கல்லு கடுக்கன் சோ 1 |
| 1904 | வை | 19 | 13 | 00 | கடுக்கன் சோடி 3 |
| 2031 | ஆடி | 1 | 7 | 00 | தண்டட்டி 1 |
| 2081 | | 13 | 20 | 00 | காதோலை சோடி 1 |
| 2095 | | 16 | 15 | 00 | தண்டட்டி சோடி 1 |
| 2145 | ஆவி | 1 | 12 | 00 | தண்டட்டி சோடி 1 |
| 2236 | | 27 | 11 | 00 | மோதிரம் 1 |
| 2413 | ஐப் | 10 | 7 | 00 | கடுக்கன் சோடி 1 |
| 2432 | | 19 | 10 | 00 | கடுக்கன் சோடி 2 |
| 2443 | | 24 | 20 | 00 | தண்டை சோடி 1, காப்பு 1 |
| 2470 | கார் | 2 | 10 | 00 | மயிர்மாட்டி சோடி 1 |
| 2531 | | 27 | 10 | 00 | பூட்டுக்கடுக்கன் சோ. 1 |
| 2546 | மார் | 1 | 24 | 00 | மோதிரம் 2 |
| 2568 | | 7 | 50 | 00 | நெல்லிக்காய்மணிக் கோர்வை 1 |

விற்பனவு:— இரத்தாட்சிஞு வைகாசி மீ 25உ (7-6-24) சனிக்கிழமை காலை 8மணி தொடக்கம் மேற்படி கடையில் எடுபட்ட நகை பிறீங்கலாக பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வெந்திஸ்மேஸ்தர்,
(Mis. 476). E. W. சொக்மன்,

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்த்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.
ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமேடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

# தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
முப்புவினால் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.

உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினால் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட்கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினால் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறை நோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணாகாது. எந்த மருந்திலுந் தீர்த எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, முத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் கிரந்தி, நரைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறாதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கை வலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அநுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
**R. M. K. வேலுசாமிபிள்ளை,**
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.
(Y. 31.)




## மகாவீரிய தங்க பஸ்பம்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

25—8—23ல் சென்னையில் நடந்த தமிழ் வைத்திய கான்பரன்ஸ் அண்டு மருந்து கண்காக்ஷியில் இவர் மருந்துகள் பஸ்ட்கிளாஸ் (முதல் தர) தேவ ஔஷதங்களென தங்க மெடலும், சர்டிபிகேட்டும், பெற்றவர்.

☞ வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரிக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10

## குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சிழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அநுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

## குரு அப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு.

ஜாஸ்தியாகப்போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரைச் சத்தையும் குறைத்து தாகத்வைத நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும் தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் நீக்கும் தளுக்கற்றது. புட்டி 1க்கு ரூபா 15.

## மாந்திரீக சத்து

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணா 8.

## சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணா 8.

தீராத வெட்டைக்கு கருவங்கச் சுண்ணம் புட்டி 1-க்கு விலை ரூபா 10—0 | மூல நிவாரணி மோதிரம் 1-க்கு விலை ரூபா 1-8-0 வி. பி. சார்ஜ் வேறு.

**சி. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.
(Q (B) 46.)

---

25-8-23ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதி பட்டமும் பெற்றவர்.

# டி. ஆர். கே. மகரத்வஜம்.

உண்மை அறிய ஒரேமுறை பரிக்ஷியுங்கள்!

இந்தியா பர்மா சிலோன் இத்தேசங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஜனங்கள் அநுபவித்து நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றுள்ளது. இதை யாதொரு பத்தியமுமின்றி ஆண், பெண், வாலிபர், விருத்தாப்பியர் யாவரும் எத்தேசத்திலும், எக்காலத்திலும் உபயோகிக்கலாம்.

எங்கள் மகரத்வஜம் எல்லா வியாதிகளுக்கும் சஞ்சீவியைப்போன்றது.
பலனில்லாவிடில் பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

புகைந்து ஓடக்கூடிய ரஸம், கெந்தகம் முதலிய சரக்குகளை இடை குறையாமல் முப்பூவினால் அப்படியே கட்டி அதில் தங்கம் சேர்த்து செந்தூரித்த அப்ரேக், அயம், காந்தம், முத்து, பவளம், முதலிய பஸ்ப செந்தூரங்களும், கஸ்தூரி, கோரோஜனை, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், பனுகு முதலிய அநேக பௌதிக தாதுவர்க்க கற்பமூலிகை சத்துக்களும் சேர்த்து மிக அபூர்வமுறையாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மனிதர்களுக்கு சம்பவிக்கக்கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகு சீக்கிரத்தில் நிவர்த்திக்கும். அநேக மருந்துகளைச் சாப்பிட்டு குணமடையாமல் நம்பிக்கை யிழந்தவர்கள் இதனால் குணமடைவது நிச்சயம். இது ஓர் கற்பத்துக்குச் சமானமானது. குஷ்டம், கிரந்தி, மேகஊரல், சூலை, நீரழிவு, வெள்ளை, வெட்டை, நீரடைப்பு, பவுத்திரம், க்ஷயம், ஈழை, இருமல், கஷ்டசுவாசம், குன்மம், பெண்கள் மாதவிடாய், வயிற்றுவலி, சுரம், சன்னி, பிளேக், முதலிய கர்ம வியாதிகளை கண்டிப்பாய் நிவர்த்திக்கும். அல்லாமல் நாளுக்குநாள் வீரியபலம் அதிகரித்து கற்பசரீரம்போல் வச்சிரகாயமாகிவிடும். உபயோகிக்கும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

10-மாத்திரைகள் புட்டி 1க்கு ரூ. 9-0-0. 30-மாத்திரைகள் ரூ. 5-0-0.
தபால் சார்ஜ் வேறு.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.
சீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)
அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை இன்றே பரீட்சித்துப் பார்க்கவும்.

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரிக்ஷை பார்க்கலாம்! இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை. பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ. 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20 பில்ஸ் ரூ. 2-0-0. வி. பி. சார்ஜ் வேறு.

### தாளக பஸ்பம்.

எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலுஞ் சரி காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் அவசியம் தீரும். புட்டி 1க்கு ரூ. 4.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரியசித்தி மென்மேலும் பெருகும். தொத்துநோய், அவமிருத்துதோஷம், மேக வியாதிகள் அணுகாது. உபயோகிக்கும் முறை மணியுடன் வரும். மணி 1க்கு ரூபா 2. 6 மணி ரூபா 10.

### நாகபஸ்பம்.

சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல் மூலமுளை மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதி சீக்கிரம் குணமாகும்: முளை தானே கரையும். அநுபவத்தில் கைகண்டது. புட்டி 1க்கு ரூ. 4.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூ 2.

பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

**டி. ஆர். கருப்பணபிள்ளை,**
ஆயுர்வேத வைத்தியசாலை, பழனி, **S I.**
M. 32).

---

[ESTABLISHED 1909].

**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினாங்கு, சிங்கப்பூர், சின்னான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதனியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

---

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna,